








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 14 16.04.2026



# ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

***************************************************************************************
***************************************************************************************

## முத்துக்கள்

## *1*

எந்தக் கார்யம் செய்யப்படுகிறதைப் பார்த்து குற்றமற்ற பெரியோர்கள் சிலாகிக்கிறார்களோ **அது தர்மம்**. அந்த செய்தியை நிந்திக்கிறார்களோ அது **அதர்மம்** என்று ஆபஸ்தம்பர் விளக்கம் அளிக்கிறார்.

*******************************************************

## *2*

ஸத்யத்திலிருந்து பிறழக்கூடாது. தர்மத்திலிருந்து பிறழக்கூடாது. க்ஷேம காரியத்திலிருந்தும் நல்வழியால் ஸம்பாதிக்கப்பட்ட ஐச்வர்யத்திலிருந்தும் பிறழக்கூடாது. அவ்விதம் தாயை தைவதமாக நினை. விருந்தாளியை தேவதமாக நினை. எந்தக் காரியங்கள் குற்றமற்று இருக்கின்றனவோ அவைகளை நீ செய்ய வேண்டும். மற்ற காரியங்களை செய்யக்கூடாது. இது மாதிரி உபதேசங்கள் ஆங்காங்கு போதிக்கப்படுகின்றன. பலவிதமான இதிஹாஸங்கள் கதைகள், உலகத்தின் நடப்புமுறைகள் இப்படியாக எவ்வளவோ விஷயங்கள் பொதிந்து கிடைக்கின்றன.

*******************************************************

## *3*

ஒரு ஸமயம் தேவதைகளுக்கு ஹவிஸ்ஸை எடுத்துக்கொண்டு செல்லும் போது இரண்டு இந்திரியங்களுக்குள் விவாதம் வந்ததாம். **வாக்கு, மனஸ்** என்ற அந்த இரண்டு இந்திரியங்களும், நான் தான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை எடுத்துச் செல்கிறேன், என்று அவரவர்களுடைய அபிப்பிராயம், விவாதம் சண்டையாக முற்றி ப்ரஜாபதி தேவதையிடம் மத்யஸ்தத்திற்குச் செல்கின்றனர். அவரும் ஆராய்ந்து வாக்கைக் கூப்பிட்டுச் சொல்கிறார். ஹே வாக்! "தூதீரேவ த்வம் மநஸோஸி,யத்தி மநஸாத்யாயதி தத்வாச வததி" இதி, ஹே வாக்கே! நீ மனதிற்கு தூதியே! உலகில் யாவரும் மனதினால் எதை நினைக்கிறானோ அதைத்தான் வாக்கினால் சொல்கிறான் என்று தீர்ப்பு அளிக்கிறார். அது முதற்கொண்டு வாக் தேவதை கோபித்து இனி மேல் பிரஜாபதி தேவதாகமான எந்த ஹோமமும் வாக்கினால் உச்சரித்துச் சொல்ல இடம் தர மாட்டேன் என்பதினால் இன்றும் பிரஜாபதி தேவதாகமான எல்லா ஹோமமும் மனதினாலேயே (உபாம்சுவாகவே) செய்யப்படுகின்றது.

**********************************************************

*4*

*நவக்ரஹங்கள் கடவுள்கள் இல்லை. ஆகவே நமக்கு நவக்ரஹ வழிபாடு கூடாது.*

*******************************************************************************

**5**

**இந்திரன் தேவனாக இருந்தும் பல வித தவறு கார்யங்களில் ஈடுபட்டுள்ளதாக புராணங்களில் படிக்கிறோம்.**

**இந்திரன் முதலிய தேவர்களும் ஜீவாத்மாக்களாக இருப்பதாலே, அவர்களும் நம்மைப்போல ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் உடையவர்கள். ஆகவே அவர்கள் தவறுகளும் செய்கின்றனர். தண்டனையும் பெறுகின்றனர்.**

**************************************************

**6**

**விஷ்ணு எங்கும் பரவி நிற்பவன். தேவர்களிடம் அந்தர்யாமியாக இருந்து நாம் கொடுக்கும் ஹவிஸ்ஸைப் பெறுபவன் நாராயணனே. பலி விஷ்ணு பக்தன். இந்த்ர, வருண முதலிய சப்தங்களால் சொல்லப்படும் விஷ்ணுவைக் குறித்தே யாகம் பண்ணுகிறான். எனவே தேவ சத்ருவாயினும் யாகம் செய்வது பொருந்தும். இவ்வாறு செய்யும் யாகமே மிகச் சிறந்ததாம். இதையே "யஜந்தே யாகம் உத்தமம்" என்று உத்தம சப்தத்தினால் வால்மீகி குறிப்பிடுகிறார்.**

****************************************************



## ஸ்வாமி தேஶிகனின் ப்ரதான சதகம்
## ......பொதுவாக முக்ய விஷயங்கள்

1. உலகத்தில் உள்ள எல்லா பொருள்களிலும் முக்கியமானது ஸ்ரீநாராயணன் எனும் பரம்பொருள்.

2. பரம்பொருள் பற்றிய வேதாந்த கருத்துகளில் முக்கியமானது- அவன் எல்லா பொருள்களிலும் உள்ளே இருந்துகொண்டு ஆள்பவனான பரமாத்மா என்பது.

3.பெருமானின் எண்ணற்ற குணங்களில் முக்கியமானது தயை அல்லது கருணை.

4. ஜீவாத்மாவின் பல தன்மைகளில் முக்கியமானது பகவானுக்கு தாஸன் எனும் தன்மை.

5.மனிதனுக்கு நன்மையான விஷயங்களில் முக்கியமானது பகவானிடம் செய்யும் சரணாகதி.

6.மனிதன் அனுபவிக்க ஏற்ற எல்லா சுகங்களிலும் முக்கியமானது மோக்ஷ சுகம்

7. சரீரத் தொடர்பால் வரும் சுகங்களில் முக்கியமானது ஸத்த்வகுணம் பெருகும் சுகம். (திருப்தி, ஜ்ஞானம், வைராக்யம் ஆகியவற்றால் வருவது)

8. பலவிதமான அறிவை அளிக்கும் குருவரர்களில் முக்கியமானவர் ஆத்ம ஜ்ஞானத்தை அளிக்கும் ஆசார்யன்.

9. ஆசார்யர்கள் பலர் இருந்தால் அவர்களில் முக்கியமானவர் திருமந்தரத்தை உபதேசம் செய்து மோக்ஷ வழியை உபதேசம் செய்பவர்.

10. பெருமானுக்கு செய்யும் கைங்கர்யங்களில் முக்கியமானது தனக்காக இல்லாமல் பெருமான் உகப்புக்காக கைங்கர்யம் செய்தல்,

**11.** பலன்களை வேண்டிப் பெறுவதில் முக்கியமானது பகவானிடமே வேண்டிப் பெறுதல். டுப் பெறும் பலன்களில் முக்கியமானது ஞானமும் பக்தியும்.

**12.** பகவானிடம் கேட்டுப் பெறும் பலன்களில் முக்கியமானது ஞானமும் பக்தியும்.

**13.** ஜ்ஞானத்தை வளர்த்துக் கொள்ளும் வழிகளில் முக்கியமானது அறிவில் முதிர்ந்தவரை அண்டி சேவை செய்தல்.

**14.** செய்யும் அனுஷ்டானத்தில் முக்கியமான அம்சம் பெருமான் ப்ரீதிக்காகவே உகப்புடன் செய்தல்.

**15.** பயம், மரியாதை, ஜ்ஞானம் முதலிய எல்லாம் கலந்த பக்தியில் முக்கியமானது நிறைந்த அன்பு எனும் அம்சம்.

**16.** அகத்தில் அன்றாட நிகழ்ச்சிகளில் முக்கியமானது ஆராதனம் (தேவர்களுக்காக செய்யும் பூஜை).

**17.**பல தேவர்களைக் குறித்து செய்யும் ஆராதனங்களில் முக்கியமானது பெருமாள் திருவாராதனம். (எல்லாவற்றையுமே பெருமாள் ப்ரீதிக்காக செய்தாலும், நேரடியாக பெருமாளுக்கு செய்யும் ஆராதனம் முக்கியம் )

**18.** பெருமாள் திருவாராதனத்தை விட முக்கியமானது பாகவத ஆராதனம் (ததீயாராதனம் என்று பெயர்; ததீயர் என்றால் பெருமானைச் சேர்ந்த பாகவதர் என்று அர்த்தம்; அவர்களுக்கான ஆராதனம் அது)

**19.** திரு ஆராதனத்தில் முக்கியமான அம்சம் பக்தியுடன் நிவேதனம் செய்தல்.

**20.** உண்ணும் உணவில் முக்கியமான அம்சம் பெருமாளுக்கு நிவேதனம் செய்ததையே உண்ணுதல்.